1975 ஏப்ரல் 7] [மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

மற்ற மாவட்டங்களுக்குப் பரப்பப்பட்டு வருகிறது. அங்கு மேற்கொண்டு உதவி தேவையா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அங்கு வங்கிக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: ஏழிலைக் கிழங்குக்கு 10 மாதம் தண்ணீர் பாய்ச்சும் நிலைமை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இதைப் பயிரிட வேண்டுமென்று வற்புறுத்துவது இந்த டிரவுட் கண்டிஷனில் சரியான முறை என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி நிலைமைகளை உத்தேசித்து 5 மாதம் 4 மாதம் குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட வழிவகை செய்து ஏழிலைக் கிழங்கு கட்டாயமாகப் பயிரிட வேண்டுமென்பது தேவையில்லை என்று கூற பரிசிலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏழிலைக் கிழங்கு என்பதும், வள்ளிக் கிழங்கு என்பதும், ஜவ்வரிசிக் கிழங்கு என்பதும், குச்சிக் கிழங்கு என்பதும் ஒரே கிழங்குதான். பத்து மாதங்கள் என்று சொல்லுவது முன்னால் இருந்த நிலைமை. ஆனால் தற்போது ஆராய்ச்சி மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட கிழங்கு எச். 165 என்பதெல்லாம் 8 மாதத்திலேயே வெட்டியாக வேண்டும். தண்ணீர் அதிகமாகக் கொள்ளுகிறது என்பதும் தவறு. எட்டு மாதப் பயிராக இருந்தாலும் இரண்டு மாதம் அல்லது 2½ மாதம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல், மழையே பெய்யாமல் இருந்தாலும் இது வளரும். It is a drought resistant plant. இது பிரேசிலில் இருந்து கொண்டு வரப்பட்டு சிறப்பாக விளைச்சல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 15 டன் அல்லது 20 டன் கிடைக்கிறது. இரட்டைச் செடிகளை ஒன்றாக வைத்தால் ஒரு ஏக்கருக்கு 30 டன் என்ற அளவுக்குத் தாராளமாக விளைவதால்தான் இதைப் பயிரிடலாம் என்று கூறப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கிள்ளியூர் பகுதியில் பாக்கேஜ் திட்டம் உருவாகி இருந்தது. அந்தத் திட்டத்தினால் முழு அளவு மக்கள் பயன்பெறவில்லை. அதிகாரிகள் தவறு செய்த காரணத்தால் நிறுத்தப்பட்டது. இப்போது பட்டணங்காலில் இருந்து போதிய அளவு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. பல்வேறு பகுதியில் தாராளமாக கழிவு பூமி இருக்கும் பகுதியில் இதைப் பயிரிட சிறப்புத் திட்டம் மறுமுறை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?